Date : 29.07.2026

PW2 : முருகன்

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

சர்வே எண்-1266/1A5B2 UDR க்கு முன்பு உள்ள அ பதிவேடு சா.சா.ஆ.1 ஆகும். மேற்படி அ பதிவேடு செல்லையா நாடார் பெயரில் உள்ள 0.01 ஏர்ஸ் பட்டா எண்.672 ஆகும். அது நத்தம் நிலவரித்திட்டத்தில் 1266/44 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான நத்தம் நிலவரித்திட்ட அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ-2 ஆகும். மேற்படி அடங்கல் பதிவேட்டில் காலி மனையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது சம்மந்தமான புலவரைபடத்தை தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ-3 ஆகும். மேற்படி சொத்தின் FMB வரைபடம் சா.சா.ஆ-4 ஆகும். புலஎண். 1266/35 க்குரிய மனைவரி தோராய பட்டாவின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது சா.சா-ஆ.5 ஆகும். மேற்படி புலஎண். 1266/35 செல்லையா மகன் செந்தில் வேல் முருகன் மற்றும் சுடலைமாட நாடார் மகன் செல்லையா ஆகிய இருவர் பெயரில் உள்ளது. அதன் மொத்த விஸ்தீரணம் 00.50 ஏர்ஸ் (1 1/4 செண்டு) ஆகும். அதன் பட்டா எண்.256 ஆகும்.

குறுக்கு விசாரணை

நான் நான்குநேரியில் 15.06.2026 முதல் பணிபுரிந்து வருகிறேன். நான் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சர்வே எண்.1266 என்பது பழைய எண் என்றால் சரிதான். அதன் மொத்தவிஸ்தீரணம் எவ்வளவு என்று என்னால் சொல்லமுடியாது அது பல உட்பிரிவுகளாக மாறியுள்ளது. சர்வே எண். 1266 நத்தமாக எந்த வருடம் வகைபாடு செய்யப்பட்டது என்றால் 1996 ல் மாற்றப்பட்டதாக எங்களது சிட்டா ஆவணத்தில் துலங்குகிறது. பழைய புஞ்சை நிலமாக இருக்கும் போது சர்வே எண்.1266/1A5B2 என்பது செல்லையா நாடார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். நத்தமாக மாறியபின்பு சர்வே எண்,1266/35 செல்லையா நாடார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1266/44 ஆனது எங்களுடைய கோப்புகளில் பழைய புஞ்சை எண்.1266/1A5B2 என்பது துலங்காது என்றால் சரிதான். நத்தம் நிலவரித்திட்டத்தில் 1266/1A5B2 என்பது 1266/45 க்கு தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. சரியானது சர்வே எண். 1266/44 என்பதாகும். சரியானது சர்வே எண். 1266/44 என்பதை காண்பிப்பதற்கு

சர்வே எண்.1266/1A5B2 கோர்லேஷன் ஆனதற்கு என்ன ஆவணம் என்றால் நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ளது. சா.சா.ஆ.1 ல் நத்தம் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.1266/45 தவறுதலாக ஏற்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளதில் அது யார் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் இசக்கிமுத்து நாடார் மகன் மூக்கன் பெயருக்கு ஏற்பட்டுள்ளது. சர்வே எண்,1266/35 அதன் பழைய புஞ்சை எண் என்னவென்றால் 1266/1A5A25 ஆகும். சர்வே எண். 1266/1A5A25 அ பதிவேட்டில் யார் பெயரில் உள்ளது என்றால் தவசி நாடார் பெயரில் உள்ளது. அதன் பட்டா எண்.711 என்தாகும். அதன் விஸ்தீரணம் 0.00.5 ஏர்ஸ் ஆகும். மேற்படி தவறு என்று நான் சொல்லப்பட்டுள்ளது என்பது சரியல்ல என்றாலும் ஆவணங்கள் சரியாகத்தான் பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல.